www.Padasalai.Net www.CBSEtips.in

FM

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

**11** - ஆம்வகுப்பு

## தமிழ்

மதுரை - 01.08.23

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 45

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5 x 1 = 5**

1) "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் பொய்க்காது

2) பாயிரம் இல்லது அன்றே

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

3) பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

அ) ஏதிலிக்குருவிகள் - மரபுக் கவிதை

ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை

இ) யானை டாக்டர் - குறும் புதினம்

ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

4) கலைகளின் உச்சம்

அ) கட்டுரை ஆ) கதை

இ) கவிதை ஈ) நாடகம்

5) 'புல்லின் இதழ்கள்' என்ற உலகப்புகழ் பெற்ற நூல் யாருடைய படைப்பாகும்?

அ) பாப்லோ நெருடா ஆ) மல்லார்மே இ) வால்ட்விட்மன்

II. அ. கீழ்வரும் வினாக்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.

6. இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக: **2 x 2 = 4**

7. வளருங் காவில் முகில்தொகை ஏறும் - தொடர் குறிப்பிடுவது யாது?

8. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

ஆ. கீழ்வரும் வினாக்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்

9. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக. **2 x 2 = 4**

10. பேச்சு மொழி எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிபாட்டு சக்தி மிக்கது ஏன்?

11. உயிரீறு, மெய்யீறு விளக்குக.

III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2 x 2 = 4**

12. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*

வலி, வளி, வழி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

13. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) ஈன்ற ஆ) வைத்தார்

14. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக

காலங்காத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்

15. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

IV. அ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடைதருக. **1 x 4 = 4**

16. சு. வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது.

17. காற்றில் ஆடும் புல்வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது?, ஏன்?

V. அ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடைதருக. **1 x 4 = 4**

18. வேதிக்கலப்பில்லா பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

19. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

VI. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடைதருக. **1 x 4 = 4**

20. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.

21. தமிழாக்கம் தருக

1. pen is mightier than Sword
2. Winners don't different things they, do things differently
3. A picture is worth a thousand words
4. Work while you work and play while you play
5. Knowledge rules the World

VII. எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைதருக **2 x 6 = 12**

22) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள்?

23) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க

24) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

VIII. மனப்பாடப்பகுதி. **1 x 4 = 4**

25) "ஏடு தொடக்கி" எனத் தொடங்கும் யுகத்தின் பாடல் பாடலை அடிபிறழாமல் எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com